# 'மேகதாது அணை கட்டுவோம்' என்பதற்கு எதிர்ப்புக் குரல் கொடுக்க வக்கில்லாத ஆட்சி!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சி உரை! முதல் பக்கத் தொடர்ச்சி

அதன் பிறகு, என்னை சட்டமன்ற உறுப்பினர் ஆக்கினீர்கள். நமது தலைவர் அவர்கள் எனக்கு அமைச்சர் பொறுப்பு கொடுத்தார்கள். அதன் பிறகு துணை முதலமைச்சர் பொறுப்பு வரைக்கும் கொடுத்தார்கள். அதற்குக் காரணம் நீங்கள்தான். இந்த முறை தலைவர் அவர்கள் என்னை எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார்கள், மிகப்பெரிய பொறுப்பு. அதற்கும் காரணம் இங்கு வந்திருக்கக்கூடிய நீங்கள்தான், உங்கள் அன்பும் உங்கள் ஆதரவும் இல்லாமல் நான் ஒன்றுமே கிடையாது. அதை நிச்சயம் உணர்ந்து என்னால் முடிந்த அளவுக்கு நம் தொகுதிக்கும், உங்களுக்கும் என்னென்ன திட்டங்கள் வேண்டுமோ, அந்தப் பணிகள் எல்லாம் செய்வேன்.

**எதிர்பார்க்காத ஒரு முடிவு!**

இந்த முறை நம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வராமல் இருந்திருக்கலாம். ஆனால், மக்கள் நமக்கு ஒரு மிகப்பெரிய ஒரு கடமையைக் கொடுத்திருக்கிறார்கள். `எதிர்க்கட்சித் தலைவராக இருங்கள், எதிர்க்கட்சியாக நீங்கள் செயல்பட வேண்டும்' என்று மக்கள் நம்மீது நம்பிக்கை வைத்து, இந்தப் பொறுப்பை நம்மிடம் கொடுத்திருக்கிறார்கள். இந்த முடிவு உண்மையாகவே, நாம் எதிர்பார்க்காத முடிவுதான். நாம் மட்டும் இல்லை, தமிழ்நாட்டு மக்களே எதிர்பார்க்காத ஒரு முடிவுதான். ஏன் இன்னும் சொல்லப்போனால், இப்பொழுது இருக்கக்கூடிய முதலமைச்சரே எதிர்பார்க்காத ஒரு முடிவுதான்.

**உண்மையான எதிரி யார்?**

களத்தில் யார் உண்மையான எதிரி என்பது தெரியாமல், இல்லாத எதிரியுடன் சண்டை போட்டிருக்கிறோம். அதை நாம் புரிந்துகொண்டுதான் ஆக வேண்டும். எங்கே தவறவிட்டோம் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் நம் தவறைத் திருத்திக்கொண்டு, அடுத்த முறை உண்மையான எதிரி யார் என்பதைக் கண்டுபிடித்து, அதற்குத் தகுந்த மாதிரி நம் செயல்பாடுகளைச் செய்தோம் என்றால், நிச்சயம் வெற்றிபெறுவோம்.

சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி மட்டும் இல்லை, தமிழ்நாடு முழுவதும் உண்மையான எதிரி யார் என்றே தெரியாமல் களமாடி இருக்கிறோம். அங்கேதான் நாம் தவறவிட்டுவிட்டோம். மக்கள் மீது அதிகப்படியான தன்னம்பிக்கையுடன் இருந்துவிட்டோம். ஊர் ஊராகப் போய் ஓட்டு கேட்டோம்.

தெருத் தெருவாக ஓட்டு கேட்டோம். நம் தலைவர் தமிழ்நாடு முழுவதும் போய் ஓட்டு கேட்டார். ஆனால், எங்கே தெரியுமா தவறவிட்டோம்? நம் வீட்டில் இருக்கக்கூடிய, நம் குடும்பத்தினரிடம் ஓட்டு கேட்க மறந்துவிட்டோம். நம் வீட்டில் இருக்கக்கூடிய நம் பிள்ளைகளிடம், நம் உறவினர்களிடம், நம் சாதனைகளைச் சொல்லத் தவறிவிட்டோம்.

இனி வரும் காலங்களில், அந்தத் தவறை நாம் திருத்திக்கொள்ள வேண்டும். முதலில் நம் வீட்டுப் பிள்ளைகளை அரசியல்படுத்த வேண்டும். கலைஞரின் திட்டங்களை, நாம் கொண்டு வந்த சாதனைகளை இப்போது இந்த ஆட்சியில் நடக்கக்கூடிய அலங்கோலங்களை எல்லாம், தினமும் நம் வீட்டில் நாம் பேச வேண்டும்.

**ஒரு திட்டமும் கிடையாது!**

இன்று இந்தப் புதிய அரசு பொறுப்பேற்று 25 நாட்கள் ஆகிவிட்டன. உருப்படியாக ஏதாவது ஒரு திட்டம் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று சொல்ல முடியுமா? ஒரு திட்டமும் கிடையாது. ஏற்கனவே பணியில் இருக்கக்கூடிய காவல்துறையினரின் வாகனத்துக்கு, வெறும் ஸ்டிக்கரை மாற்றி ஒட்டி, `சிங்கப்பெண் திட்டம்' என்று ஒரு திட்டத்தைக் கொண்டு வரப்போகிறோம் என்று சொல்லி, அதையும் கொண்டுவர முடியாத நிலைமையில்தான் இன்று இந்த ஆட்சி நடந்துகொண்டு இருக்கிறது.

அதாவது ஒரு கூடுதல் செலவு இல்லாத ஒரு திட்டத்தைக் கூடத் தொடங்கி வைப்பதற்கு வக்கில்லாத ஒரு `சோபா மாடல் ஆட்சி' இன்று நடந்துகொண்டு இருக்கிறது.

யோசித்துப்பாருங்கள், 2021–இல் நம் தலைவர் முதலமைச்சர் பொறுப்பேற்கும்போது, முதல் நாள் கையெழுத்துப் போட்டார். என்னென்ன திட்டங்கள் தெரியுமா கொண்டு வந்தோம்? மகளிருக்கு `விடியல் பயணத் திட்டம்' முதல் கையெழுத்துப் போட்டார், முதல் நாளிலேயே கொண்டு வந்தார்.

அப்போது இருந்த நிலைமை என்ன என்று உங்களுக்குத் தெரியும். நிதி நிலைமை மோசம், கொரோனா இரண்டாவது அலை, ஊரடங்கு. முதல் நாளிலேயே கையெழுத்துப் போட்டார். மகளிர் விடியல் பயணத் திட்டம் கொண்டு வந்தார்.

கொரோனா நிவாரண நிதியாக ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் 4,000 ரூபாய் கொடுத்தார் நம் தலைவர். ஆவின் பால் லிட்டருக்கு 3 ரூபாய் குறைத்தார், பெட்ரோல் விலையை 2 ரூபாய் குறைத்தோம். இதெல்லாம் செய்தது நம் திராவிட மாடல் அரசு, நம் கழகத் தலைவர் அவர்கள். ஆனால் இன்று இந்த சோபா மாடல் அரசு ஏதாவது ஒரு திட்டத்தை நிறைவேற்றி இருக்கிறார்களா?

**4–ஆம் தேதிக்கு பிறகு கூத்துகள்!**

நாம் இந்தத் தேர்தலில் சில லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில்தான் வெற்றி வாய்ப்பை இழந்திருக்கிறோம். நம்மை விட 17 லட்சம் வாக்குகள்தான் அதிகம் பெற்று, இன்று இந்த ஆட்சி அமைந்திருக்கிறது. அவர்கள் எப்படி ஆட்சி அமைத்தார்கள், நான்காம் தேதிக்குப் பிறகு என்னென்ன கூத்துகள் நடந்தன என்பதையெல்லாம் நீங்கள் அத்தனை பேரும் தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள். நான்காம் தேதி இரவு, வெற்றிபெற்ற நம் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தமிழ்நாட்டில் இருந்து, எல்லா மாவட்டங்களில் இருந்தும் கிளம்பி சென்னைக்கு வருவதற்கு, தலைவரைப் பார்ப்பதற்கு, பேருந்தில் பயணச்சீட்டு, தொடர்வண்டியில் பயணச்சீட்டு, விமா னத்தில் பயணச்சீட்டைப் பதிவு செய்துகொண்டு இருந்தார்கள். ஆனால், இன்று இருக்கக்கூடிய ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்களும், யாருக்கும் தெரியாமல் திருட்டுத்தனமாக எங்கே சென்று தங்கலாம் என்று சொகுசு விடுதிகளில் அறை பதிவு செய்துகொண்டு இருந்தார்கள். இதுதான் நம் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் மற்ற கட்சிகளுக்கும் உள்ள வித்தியாசம். இதுதான் ஒரு தொண்டன் தலைமை மீது வைத்துள்ள நம்பிக்கை. எந்தக் காலத்திலும் அந்த `ரிசார்ட் பாலிடிக்ஸ்' அரசியலை நம் தலைவர், நம் திராவிட முன்னேற்றக் கழகம் என்றுமே செய்யாது.

முக்கியமாக, தேர்தல் முடிவுகள் முழுமையாக வருவதற்கு முன்பே நம்மோடு கூட்டணி வைத்திருந்த காங்கிரஸ் இயக்கம், துரோகக் கூட்டம் நம் பேரைச் சொல்லி, நம் தலைவர் முகத்தைக் காட்டி வாக்குகளைப் பெற்று, தலைவரைப் பார்த்து ஒரு நன்றிகூடச் சொல்லாமல், ஓடிப்போய்விட்டது. அந்த நன்றிகெட்ட கூட்டம்.

இதை தி.மு.க. காரன் என்றுமே மறக்க மாட்டான், மறக்கக்கூடாது. தமிழ்நாட்டு மக்களும் மறக்க மாட்டார்கள். ஐந்து சட்டமன்ற உறுப்பினர்களை அவர்களுக்கு ஆதரவு அளிக்க வைத்து, ஆட்சி அமைத்தார்கள். அது மட்டுமில்லை, நம் கூட்டணியில் வெற்றிபெற்ற இன்னும் சில கூட்டணிக் கட்சிகள் எல்லாம், நம் தலைவரிடம் வந்து சொல்லிவிட்டுச் செல்ல, தலைவர்தான் `சென்று வாருங்கள்' என்றார்கள்.

நம் தலைவர் தயவால்தான் இன்று இந்த ஆட்சி நடந்துகொண்டு இருக்கிறது. ஆனால் என்ன, முதலில் வெளியில் இருந்து ஆதரவு என்று சொல்லிவிட்டுப் போனார்கள், அங்கே சென்றவுடன், ஆசை யாரை விட்டது? இந்த முதலமைச்சர் எங்கே சென்றாலும், முதலில் சோபா போகும், சோபாவிற்குப் பின்னாடியே முதலமைச்சர் போவார். இப்போது அமைச்சரவையிலும் இடம் பெற்றுவிட்டார்கள், அவர்களுக்கும் வாழ்த்துகள். அவர்கள் எல்லாம் அமைச்சர் ஆவதற்கு ,முன்பே சட்டமன்றத்தில் அவர்களுக்கு வாழ்த்து சொன்னவன்தான் இந்த எதிர்க்கட்சித் தலைவர். இதெல்லாம் நடக்கும் என்று எனக்குத் தெரியும். இப்படி நம் தலைவரின் உழைப்பால் வெற்றிபெற்ற, அந்தக் கட்சிகளின் ஆதரவுடன்தான் இன்று இந்த சோபா மாடல் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**சத்தியமாக தெரியாதுங்க!**

இன்று இருக்கக்கூடிய ஆளுங்கட்சி 108 இடங்களில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இன்னொன்று தெரியுமா? இந்த 108 தொகுதிகளில், சில தொகுதிகளைத் தவிர, வாக்கு செலுத்திய மக்களுக்கு யார் சட்டமன்ற உறுப்பினர் என்று தெரியாது. இன்னும் சொல்லப்போனால், மக்களுக்கு இல்லை, இப்போது இருக்கக்கூடிய முதலமைச்ச ருக்கே யார் சட்டமன்ற உறுப்பினர், யார் அமைச்சர் என்று தெரியாது. சவால் விடுகிறேன்.

நான்கு நாட்களுக்கு முன்பு, தொலைக்காட்சிகளில் செய்தியைப் பார்த்திருப்பீர்கள், திருவள்ளூர் மாவட்டத்தில் இரவு முழுவதும் மின்சாரம் இல்லை. பொதுமக்கள் அத்தனை பேரும் தெருவிற்கு வந்து போராட்டத்தில் இறங்கிவிட்டார்கள். செய்தியாளர்கள் சென்று அவர்களிடம், கேட்கிறார்கள் ``ஏன் இப்பொழுது சாலை மறியல் செய்கிறீர்கள்? சட்டமன்ற உறுப்பினரைப் பார்த்து கோரிக்கை வைக்க வேண்டியதுதானே?” என்று, அப்பொழுது அந்த மக்கள் எல்லாம் சொல்கிறார்கள், ``யார் எங்கள் சட்டமன்ற உறுப்பினர் என்றே சத்தியமாக எங்களுக்குத் தெரியாதுங்க. தெரிந்தால்தானே அவர்கள் வீட்டுக்குச் சென்று நாங்கள் கேட்க முடியும்? என்று கேட்கிறார்கள். இதுதான் இந்த சோபா மாடல் அரசின் லட்சணம்.

ஓட்டு போட்ட மக்களுக்கு அவர்களின் சட்டமன்ற உறுப்பினர்கள் யார் என்று தெரியவில்லை. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் எந்தத் தொகுதியில் நின்று ஜெயித்தோம் என்று தெரியவில்லை. நேற்று ஒரு அமைச்சர் நன்றி சொல்கிறார், அங்கே இருக்கக்கூடிய மக்கள் எல்லாம் சொல்கிறார்கள், ”இது உங்கள் தொகுதி கிடையாதுங்க, நாங்கள் உங்களுக்கு ஓட்டே போடவில்லை என்று. நீங்கள் பக்கத்துத் தொகுதி” என்று. இப்படிப்பட்ட ஒரு கேடுகெட்ட சோபா மாடல் ஆட்சிதான் இன்று தமிழ்நாட்டில் நடந்துகொண்டிருக்கிறது.

இதெல்லாம் நான் சொல்லவில்லை, உண்மையாகவே நடந்தது தொலைக்காட்சிகளில் நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதிலும் இப்பொழுது அவர்கள் வேட்பாளராக அறிவித்ததெல்லாம் யார் என்று தெரியுமா? ஜெயித்தவர்கள் எல்லாம் யார் என்று தெரியுமா? இப்பொழுது அமைச்சராக இருக்கிறவர்கள் எல்லாம் யார் என்று தெரியுமா? போதைப்பொருள் விற்றவர், கஞ்சா விற்றவர், மனைவியைக் கொடுமைப்படுத்தி அடித்தவர், சினிமா படத்துக்குத் திருட்டுத்தனமாக டிக்கெட் விற்றவர், புதிய திரைப்படத்தின் திருட்டு வி.சி.டி விற்றவர், ஜோசியத்தால் புற்றுநோ யைக் குணப்படுத்த முடியும் என்று போலி மருத்துவம் பார்த்தவர், ஆர்.எஸ்.எஸ்–இல் சேர்ந்து காக்கி கால்சட்டை போட்டுச் சுற்றியவர், வாச்சாத்தி கொடுமைக்கு முக்கியமான காரணமாக இருந்தவர், வேட்பாளர் அறிவிப்பிற்கு முந்தின நாள் வேறு கட்சியிலிருந்து தாவி குதித்துப் போனவர், இவர்கள் எல்லாம் இன்று ஆளுங்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள். இவர்கள் பெயரும் முதலமைச்சருக்குத் தெரியாது.

லாட்டரி சீட்டு விற்றவரா? இதெல்லாம் முன்னாடியே தெரிந்திருந்தால் சரியாக சூதானமாக இருந்திருக்கலாம். இதெல்லாம் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகுதான் நமக்கே தெரிகிறது. இன்னொன்று கொடுமை என்ன தெரியுமா? இந்த ஆட்சியில் அமைச்சர்களாக வந்திருக்கிறார்கள் அல்லவா, நியமிக்கப்பட்டி ருக்கிறார்கள் அல்லவா, எந்த அமைச்சருக்கு எந்தத் துறை என்று அமைச்சருக்கே தெரியவில்லை.

ஒரு அமைச்சர் ``நான் சுற்றுச்சூழல் அமைச்சரா அல்லது சுற்றுலாத்துறை அமைச்சரா?” என்று செய்தியாளர்களிடம் கேட்கிறார். இந்த மாதிரி ஒரு கேடுகெட்ட ஆட்சியை எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா? என்ன பொறுப்பு என்று, அமைச்சருக்கே தெரியவில்லை எந்தத் துறை என்று தெரியவில்லை.

`ஒரு கோமாளி அரண்மனைக்குப் போவதாலேயே, அவன் அரசன் ஆகிவிட மாட்டான். அந்த அரண்மனைதான் சர்க்கஸ் கூடாரமாக மாறிவிடும்' என்று ஒரு பழமொழி சொல்வார்கள். இன்று அது நம் கண் முன்னாடி நடந்துகொண்டு இருக்கிறது. ஆனால் ஒரு கோமாளி இல்லை, எல்லாமே கோமாளிகள்தான். ரம்மி விளையாட்டில்தான் சொல்வார்கள், பதிமூன்றும் ஜோக்கராக வந்தால் என்ன செய்வது' என்று, அந்த நிலைமையில் இன்று இந்த `சோபா மாடல் அரசு' நடந்துகொண்டு இருக்கிறது. இதைத்தான் நம் தலைவர் `இங்கு அமைந்திருப்பது ஒரு மாயாஜால, கவர்ச்சி ஆட்சி அமைந்திருக்கிறது” என்று சொன்னார்.

இரண்டு நாட்களுக்கு முன்பு நம் `சி.எம். சார்' அவர்கள், நன்றி சொல்வதற்காக திருச்சி கிழக்குத் தொகுதிக்குச் சென்றார். இங்கே பெரம்பூரில் ஜெயித்திருக்கிறார், இங்கே இருக்கக்கூடிய பெரம்பூருக்குச் சென்று நன்றி சொல்வதற்கு வக்கில்லை. இதுவும் நான் சொல்லித்தான் சென்றார், சட்டமன்றத்தில் நான் சொன்னேன், ``திருச்சிக்குச் சென்று முதலில் நன்றி சொல்லுங்கள்” என்று, 20 நாட்களுக்கு முன்னாடி சொன்னேன். அங்கு சென்றாரே நன்றி சொன்னாரா?

பொதுவாக ஒரு முதலமைச்சர் ஆனதற்குப் பிறகு, நம் தலைவர் இந்த ஐந்து வருடத்தில் எந்த மாவட்டத்துக்குச் சென்றாலும் அந்த மாவட்டத்துக்குப் புதிய திட்டங்களை அறிவிப்பார். ஏதாவது ஒரு திட்டத்தை அறிவித்தாரா?

திருச்சிக்குப் போனார், ஏதாவது திட்டத்தை அறிவித்தாரா? ஒரு திட்டமும் கிடையாது. திருச்சி கிழக்கில் இன்னும் ஆறு மாதத்தில் இடைத்தேர்தல் வரப்போகிறது. அதற்கான பிரச்சாரத்திற்காகச் சென்றுவிட்டு அவர் எப்பொழுது வாயைத் திறந்தாலும், அவர் வாயிலிருந்து வரும் வார்த்தை ஒன்று மட்டும்தான். எல்லாவற்றிற்கும் காரணம் தி.மு.க தான். திருச்சியில் அவர் பேசிய பேச்சைக் கேட்டு, தமிழ்நாட்டு மக்கள் இன்று தலையில் அடித்துக்கொள்கிறார்கள். இவரையெல்லாம் ஒரு முதலமைச்சராகத் தேர்ந்தெடுத்திருக்கிறோமே என்று தலையில் அடித்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள்.

அதில் கோபம் வருகிறது அவருக்கு. ``கவர்ச்சியால்தான் ஆட்சிக்கு வந்தீர்கள் என்று என்னைப் பார்த்துச் சொல்கிறார்கள்” என்று முதலமைச்சருக்கு, `சி.எம்.' சாருக்கு கோபம் வருகிறது. சரி, கவர்ச்சியில் ஜெயிக்காமல் நீங்கள் எதை வைத்து ஜெயித்தீர்கள்? சொல்லுங்கள் பார்ப்போம். ஏதாவது ஒரு இரண்டு காரணங்களைச் சொல்லுங்கள் பார்ப்போம். கலைஞர் மாதிரி இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு, போராட்டம் செய்து சிறைக்குப் போய்விட்டு வந்தீர்களா? சரி, எங்கள் தலைவர் மாதிரி, மிசா கொடுமையில் ஒரு வருடம் உள்ளே இருந்துவிட்டு வந்தீர்களா? கட்சி ஆரம்பித்து இரண்டு வருடம்தான் ஆகிறது. மாநில உரிமைக்காக என்றைக்காவது குரல் கொடுத்திருக்கிறீர்களா? ஒன்றிய பா.ஜ.க அரசுக்கு எதிராக ஏதாவது குரல் கொடுத்திருக்கிறீர்களா? பின் வேறு எதை வைத்து நீங்கள் ஆட்சிக்கு வந்தீர்கள்? ஏதாவது ஒரு போராட்டம் செய்திருக்கிறீர்களா? எல்லாவற்றையும் விடுங்கள். தமிழ்நாடு முழுவதும் சென்று மக்களைச் சந்தித்து, உங்கள் கொள்கை என்னவென்று சொல்லி ஓட்டு கேட்டீர்களா? உங்கள் வேட்பாளர் பெயர் உங்களுக்குத் தெரியுமா? எதுவுமே தெரியாது. இதைத்தான் எங்களின் தலைவர் அவர்கள் `கவர்ச்சி அரசியல்' என்று சொன்னார்கள்.

அதுமட்டும் இல்லை, இன்னொன்று சொல்கிறார்.

> ## இதைவிட ஒரு மோசமான உருட்டை யாராவது உருட்ட முடியுமா?
>
> **அவர் கோட்டு சூட்டு, அவர் போட்டுக்கொள்கிறார். அதற்கு ஒரு புதியதாக ஒரு விளக்கம் கொடுத்திருக்கிறார். அவர் கருப்புக் கோட்டு போட்டிருப்பது பெரியாரின் கொள்கையாம்! இதைவிட ஒரு மோசமான உருட்டை யாராவது உருட்ட முடியுமா? உங்கள் ஜோசியரை அதிகாரப்பூர்வ அரசு ஆலோசகராக (Official Government Advisor) மாற்ற முயற்சி செய்து, பல்பு வாங்கிய நீங்கள் ஒரு உண்மையான பெரியாரிஸ்ட்டா?**
>
> **நீங்கள் கோட்டு சூட்டு போடுவதில், எங்களுக்குப் பிரச்சினையே கிடையாது. ஆனால், எல்லாவற்றிலும் இன்று கோட்டை விட்டுக்கொண்டு இருக்கிறீர்கள், அதைத்தான் நாங்கள் சுட்டிக்காட்டிக்கொண்டு இருக்கிறோம்.**

அவர் வாயில் நல்லா வந்துவிடுமாம். வாயில் என்ன வரும்? தமிழ்நாட்டு மக்கள் வாயில் நிறைய வரும். தமிழ்நாட்டு மக்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த முதலமைச்சர் வாயில் ஏதாவது ஒரு நல்ல வார்த்தை வருமா என்று, ஏதாவது ஒரு திட்டம் வருமா என்று இன்று காத்துக்கொண்டு இருக்கிறார்கள். இதுவரைக்கும் உருப்படியாக ஒன்றும் வரவில்லை. எந்தப் பிரச்சினையைக் கேட்டாலும் தி.மு.க Vs த.வெ.க. எதைப்பற்றிக் கேட்டாலும் தி.மு.க செய்கின்ற சதி. இப்படிப்பட்ட ஒரு முதலமைச்சரை இன்று தமிழ்நாட்டு மக்கள் தேர்ந்தெடுத்து விட்டார்கள். அந்த முடிவை நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும்.

அதுமட்டும் இல்லை, தூர சக்தி, ஓர சக்தி, பார சக்தி என்று திரைப்பட இயக்குனர் டி.ராஜேந்தர் மாதிரி ரைமிங்காக டயலாக் பேசுகிறார். தி.மு.க–விற்கு வயது 75. பவள விழா ஆண்டைத் தாண்டி சென்றுக்கொண்டு இருக்கிறது தி.மு.க. நாங்கள் பார்க்காத வெற்றியும் கிடையாது, நாங்கள் பார்க்காத தோல்வியும் கிடையாது. எவ்வளவு பெரிய தோல்வியாக இருந்தாலும், மீண்டு எழுந்து வருவோம். எங்கள் தலைவர் எங்களுக்கு அப்படித்தான் பயிற்சி அளித்திருக்கிறார். ஆனால், எந்தக் காலத்திலும் தி.மு.க மக்களை விட்டுத் தூரமாக நின்றதே கிடையாது.

இன்று உங்களுடன் ஒட்டிக்கொண்டு இருக்கிறதே காங்கிரஸ் கட்சி, 1976–ஆம் ஆண்டு எமர்ஜென்சியை தமிழ்நாட்டில் கொண்டு வந்தது. அப்பொழுது தமிழ்நாட்டில் தி.மு.க ஆட்சி. கலைஞர்தான் முதலமைச்சர். அப்பொழுது, ``எங்கள் ஆட்சியே போனாலும் பரவாயில்லை, எமர்ஜென்சியை எதிர்ப்போம்'' என்று மக்களோடு நின்ற கழகம், இந்தத் திராவிட முன்னேற்றக் கழகம். என்றுமே மக்களை விட்டுத் தூரமாக, யாருக்கும் பயந்து ஓடும் கூட்டம் கிடையாது. பயம் என்பது உடன்பிறப்புகளின் இரத்தத்திலேயே கிடையாது. பயம் என்ற வார்த்தையே எங்கள் அகராதியில் கிடையாது.

இன்னும் கொஞ்ச நாளில் யார் தூரமாக நிற்கப் போவது, யார் ஓடப் போவது என்பதை, மக்கள் விரைவில் தெரிந்துகொள்வார்கள். 25 நாட்கள்தானே ஆகின்றன?

**மூன்றாவது இடத்துக்குச் சென்றுவிட்டது!**

இன்று தமிழ்நாட்டு அரசு விழாவில், `தமிழ்த்தாய் வாழ்த்து' மூன்றாவது இடத்துக்குச் சென்றுவிட்டது. இதை ஓரமாக நின்று வேடிக்கை பார்த்தது யார்? திருவள்ளுவருக்கு மீண்டும் காவி வண்ணம் அடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். இதைப்பற்றிப் பேசுவதற்கு வக்கில்லாமல், கோழையாக இன்று ஓரமாக நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டு இருப்பது யார்? இன்று கர்நாடக முதலமைச்சர் டி.கே.சிவக்குமார் அவர்கள் சொல்கிறார், ``இவ்வளவு நாள் தி.மு.க. ஆட்சியில் இருந்தது, அதனால் மேகதாது அணையைப் பற்றி நம்மால் பேச முடியாமல் இருந்தது. இன்று தி.மு.க ஆட்சியை விட்டுப் போய்விட்டது, இனிமேல் நமக்குக் கவலை கிடையாது. மேகதாது அணையைக் கட்டுவோம்” என்று சொல்லும்போது, அதைப்பற்றி எதிர்த்து குரல் கொடுக்க முடியாத ஒரு வக்கில்லாத ஆட்சி. இன்று யார் நின்று நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டு இருப்பது?

இப்படி நாளுக்கு நாள் தமிழ்நாட்டில் இந்த 25 நாட்களில் எவ்வளவு கொலைகள், கொள்ளைகள், பாலியல் வன்முறைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. குழந்தையிலிருந்து பாட்டி வரைக்கும் பாலியல் வன்கொடுமையால் எல்லாரும் பாதிக்கப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இதைப்பற்றி எல்லாம் பேசினால், முதலமைச்சர் அவர்களுக்குக் கோபம் வருகிறது. என்ன தெரியுமா சொல்கிறார்? ``ஆறு மாதம் சும்மா இருப்பேன் என்று சொன்னீர்களே” என்று அழுகிறார்.

``ஆறு மாதம் சும்மா இருப்பேன் என்று சொன்னீர்கள் அல்லவா, இப்படியெல்லாம் பேசலாமா?” என்று புலம்புகிறார்.

நீங்கள் பொய் வாக்குறுதிகள் நிறைய கொடுத்தீர்கள். அப்பொழுதே சொன்னோம், இதெல்லாம் நிறைவேற்ற முடியாது என்று. அதைச் செயல்படுத்துவதற்குத்தான் உங்களுக்கு ஆறு மாதம் டைம்” என்று எங்கள் தலைவர் சொன்னார். எவ்வளவு பொய் வாக்குறுதிகள்.

நான் சட்டமன்றத்தில் பேசினேன், ``நிச்சயம் உங்களால் நீங்கள் கொடுத்திருக்கக்கூடிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது. அவகாசம் எடுத்துக்கொள்ளுங்கள், ஆனால், தமிழ்நாட்டு மக்களை ரொம்ப நாள் ஏமாற்றாதீர்கள். எங்கள் தலைவர், எங்கள் திராவிட மாடல் அரசில் பல நல்ல திட்டங்களைக் கொடுத்தோம். மகளிர் உரிமைத்தொகை கொடுத்தோம், அதைக் கொடுங்கள். முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் கொடுத்தோம், அதைக் கொடுங்கள். கல்வி ஊக்கத்தொகை கொடுத்தார் எங்கள் தலைவர், அதையெல்லாம் நிறுத்திவிடாதீர்கள். நடைபெற்றிருக்கக்கூடிய திட்டங்களை நிறுத்தக் கூடாது” என்று நான் சட்டமன்றத்தில் பேசினேன். ``மக்களை ரொம்ப நேரம் காக்க வைத்துவிடாதீர்கள் என்று சொன்னேன்.

இன்று உங்கள் ஆட்சியின் கொடுமையைத் தமிழ்நாட்டு மக்களால் அரை நாள் கூடத் தாங்க முடியவில்லையே! புதியதாகத் திட்டம் கொண்டு வருவதற்கு, வாக்குறுதி நிறைவேற்றுவதற்கு ஆறு மாதகால அவகாசம் சரி. ஆனால், தினசரி பிரச்சினை இருக்கிறதே, சட்டம் ஒழுங்கு பிரச்சினை இருக்கிறதே, அதில் நீங்கள் சொதப்பினால் நாங்கள் எல்லாம் வாயை மூடிக்கொண்டு சும்மா இருக்க வேண்டுமா? வேடிக்கை பார்க்க வேண்டுமா? நிச்சயம் குரல் கொடுப்போம். நிச்சயம் உங்கள் தவறுகளைச் சுட்டிக்காட்டுவோம்.

திமுக ஆட்சிக்கு வந்தபோது, 2021–ஆம் ஆண்டு நம் தலைவர் சொன்னார், ``எங்களுக்கு வாக்களிக்காத மக்களும், 'தி.மு.க–விற்கு வாக்களிக்காமல் விட்டுவிட்டோமே, தவறு செய்துவிட்டோமே' என்று வருந்தும் அளவுக்கு எங்களின் ஆட்சி அமையும், ஆட்சி நடத்துவோம் என்று நம் தலைவர் சொன்னார். ஆனால், இன்று உங்கள் ஆட்சியில், உங்களுக்கு ஓட்டு போட்டவர்கள்கூட, ``அய்யய்யோ தெரியாமல் இந்தக்கட்சிக்கு ஓட்டு போட்டுவிட்டோமே” என்று வருந்தக்கூடிய அளவுக்கு உங்கள் ஒவ்வொரு நாள் செயல்பாடும் இன்று நடந்துகொண்டு இருக்கிறது.

ஆட்சி அமைப்பதற்கு, `குதிரை பேரம்' நடத்தவில்லை என்று முதலமைச்சர் அவருக்கு அவரேதான் சான்றிதழ் கொடுத்துக்கொள்கிறார். என்னென்ன நடந்தது என்று தமிழ்நாட்டு மக்கள் பார்த்தார்கள். மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினரை என்ன செய்தீர்கள்? அந்தக் கட்சித் தலைவருக்கே தெரியாமல் கடத்திக்கொண்டு சென்றீர்கள். இதற்கு பெயர் என்ன தெரியுமா? தூய சக்தியாம். இதற்குப் பெயர் தூய சக்தியா? நாற சக்தி.

அதுமட்டும் இல்லை, இப்பொழுது என்ன தெரியுமா சொல்கிறார்? ``மற்றும் சில பேராம்”. பேரைச் சொல்லக் கூட வெட்கப்படுகிறாராம், ``மற்றும் சில பேர், அல்லு சில்லு கட்சி”. நான் கேட்கிறேன், அல்லு சில்லு கட்சிதானே, பிறகு எதற்கு அவர்களை எல்லாம் தனித்தனியாகச் சென்று பார்த்து சால்வை அணிவித்து போட்டோ எடுத்தீர்கள்? எதற்கு சோபா செட் அனுப்பி வைத்தீர்கள்? இப்பொழுது கடைசியில் அவர்களையும் கழற்றி விட்டுவிட்டார்.

ஒரு திரைப்படத்தில் கவுண்டமணியும் செந்திலும் இளநீர் வியாபாரம் செய்துகொண்டு இருப்பார்கள். நினைவு இருக்கிறதா? கவுண்டமணி ஓனர், செந்தில் அசிஸ்டண்ட். எதிரே வடிவேலு ஒரு கடை போடுவார். செந்திலுக்கும் வடிவேலுக்கும் ஒரு உடன்பாடு ஆகிவிடும். என்ன செய்வார், ஒவ்வொரு இளநீராகக் கயிறு கட்டி கவுண்டமணிக்குத் தெரியாமல் பின்னாடி வழியாக அனுப்பிக்கொண்டே இருப்பார். இதை வைத்து வடிவேலு பெரிய கடை போட்டு விடுவார். இன்று அதைத்தான் தமிழ்நாட்டில் இந்த ஆளுகின்ற கட்சி செய்துகொண்டிருக்கிறது.

மற்ற கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்களை ஒவ்வொருவராக உருவிக்கொண்டு இருக்கிறார்கள். நாம் பெருமையாகச் சொன்னோம், `திரவிடியன் மாடல்', `டெவலப்மெண்ட் மாடல்', `1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம்' (1 Trillion Dollar Economy) என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டு இருந்த தமிழ்நாட்டை, இன்று `சோபா மாடல்' ஆக்கிய பெருமைதான் இன்று இந்த ஆட்சிக்கு உண்டு. வேறு எந்த செயல்பாடும் கிடையாது, எதுவும் கிடையாது. மக்களுக்கு இனி உங்கள் பஞ்ச் டயலாக்ஸ்சும், உங்கள் ரீல்ஸும் தேவையில்லை. அவர்களுக்குத் தேவை பாதுகாப்பும் உங்கள் வாக்குறுதிகளும், திட்டங்களும்தான்.

புது முதலமைச்சருக்கு புதுவிதமான ஒரு பிரச்சினை இருக்கிறது, `போபியா' என்று சொல்வார்கள். யார் எதைப்பற்றிப் பேசினாலும், தன்னைப்பற்றித்தான் பேசுகிறார்கள் என்ற ஒரு நினைப்பு. அவரே அதை கற்பனை செய்துகொண்டு அதிலேயே இருக்கிறார். என்ன தெரியுமா சொல்கிறார்? அவர் கோட்டு சூட்டு போடுகிறாராம், அதை நாம் கிண்டல் செய்துவிட்டோமாம். நாம் யாரும் அதைப்பற்றி எந்த விமர்சனமும் செய்யவே இல்லை. அவர் கோட்டு சூட்டு, அவர் போட்டுக்கொள்கிறார். அதற்கு ஒரு புதியதாக ஒரு விளக்கம் கொடுத்திருக்கிறார். அவர் கருப்புக் கோட்டு போட்டிருப்பது பெரியாரின் கொள்கையாம்! இதைவிட ஒரு மோசமான உருட்டை யாராவது உருட்ட முடியுமா? உங்கள் ஜோசியரை அதிகாரப்பூர்வ அரசு ஆலோசகராக (Official Government Advisor) மாற்ற முயற்சி செய்து, பல்பு வாங்கிய நீங்கள் ஒரு உண்மையான பெரியாரிஸ்ட்டா?

நீங்கள் கோட்டு சூட்டு போடுவதில், எங்களுக்குப் பிரச்சினையே கிடையாது. ஆனால், எல்லாவற்றிலும் இன்று கோட்டை விட்டுக்கொண்டு இருக்கிறீர்கள், அதைத்தான் நாங்கள் சுட்டிக்காட்டிக்கொண்டு இருக்கிறோம்.

என்னென்ன வாக்குறுதிகள் கொடுத்தீர்கள்? ஏதாவது ஒன்றைக் காப்பாற்றினீர்களா? முக்கியமாக விவசாயிகளுக்குப் பயிர்க்கடன் 5 ஏக்கர் வரை வைத்துள்ள விவசாயிகளின் பயிர்க்கடனைத் தள்ளுபடி செய்வோம் என்று சொல்லிவிட்டு இன்று அவர்களுக்கு பட்டை, நாமம் போட்டாச்சு. இன்று அவர்கள் எல்லாம் தெருவில் இறங்கிவிட்டார்கள், போராட்டம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். இன்னொரு பொய் வாக்குறுதி கொடுத்தார், 200 யூனிட் வரைக்கும் இலவச மின்சாரம் தருவோம் என்று சொல்லிவிட்டு, இன்று என்ன சொல்கிறார், 500 யூனிட்டுக்கு மேல் மின்சாரம் பயன்படுத்தி இருந்தால், 200 யூனிட் இலவசம் கிடையாது என்று இன்னொரு நாமத்தையும் போட்டுவிட்டார். அதுதவிர இன்னும் பல்வேறு வாக்குறுதிகள், பொய் வாக்குறுதிகள் கொடுத்திருக்கிறார்கள்.

என்னென்ன தெரியுமா? உரிமைத் தொகை மாதம் 2,500 ரூபாய், ஞாபகப்படுத்திக்கொண்டேதான் இருப்போம். கொடுக்கும் வரைக்கும் விடமாட்டோம். வருடத்துக்கு 6 சிலிண்டர். தாய்மாமன் சீர், பட்டுப்புடவை, தங்கச் சங்கிலி, இப்படி கன்ன்பின்னாவென்று வாக்குறுதிகளை அள்ளி வீசியிருக்கிறீர்கள். மக்கள் இதெல்லாம் ஞாபகம் வைத்துக்கொண்டேதான் இருப்பார்கள், நாங்கள் தொடர்ந்து ஞாபகப் படுத்திக்கொண்டேதான் இருப்போம். தி.மு.க மீது பழியைப் போட்டு மக்களைத் திசைதிருப்பி இருக்கிறார்கள் நம் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள்.

இந்த நிகழ்ச்சியின் மூலமாக நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், தமிழ்நாட்டு மக்களுக்கு ஏதாவது ஒன்று என்றால், திராவிட முன்னேற்றக் கழகமும் நாங்களும் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்க மாட்டோம், எங்கள் தலைவர் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்க மாட்டார். உங்களுக்கு எதிராகக் குரல் கொடுப்போம், தவறு செய்தீர்கள் என்றால் ஆளுங்கட்சிக்கு எதிராகக் குரல் கொடுப்போம். களத்துக்கு வந்து போராடுவோம்.

நம் முதலமைச்சர் அவர்கள், சி.எம். சார் சொன்னது மாதிரி, ரீல்ஸ் பார்த்து, ஓட்டு போட்ட மக்கள் எல்லாம், இன்று தொலைக்காட்சிகள் பார்க்க ஆரம்பித்துவிட்டார்கள், செய்தித்தாள்கள் படிக்க ஆரம்பித்துவிட்டார்கள். சட்டமன்றத்தை நேரலையாகப் பார்த்துவிட்டார்கள். சட்டமன்றத்தில் நாம் எவ்வளவு ஓட விட்டோம் என்பதையும் பார்த்து ரசித்துவிட்டார்கள். இப்பொழுது சட்டமன்ற நிகழ்வுகளை எல்லாம் தொடர்ந்து கவனிப்பார்கள். இந்த மாற்றமும் விழிப்பு உணர்வும்தான் உங்கள் வீழ்ச்சிக்கான தொடக்கம்.

எல்லாவற்றிற்கும் தி.மு.க மீது பழி போட்டுத் தப்பித்துவிடலாம் என்று நினைக்கிற உங்கள் கனவு இன்று ஒரு நாள் பலித்திருக்கலாம், என்றைக்கும் பலிக்காது. தமிழ்நாட்டு மக்கள் விரைவில் உங்கள் முகத்திரையைக் கிழிப்பார்கள், உங்கள் உண்மையான முகத்தை அவர்கள் பார்ப்பார்கள். இந்தக் கவர்ச்சி அரசியலுக்கு நிச்சயம் ஒரு முடிவுரை எழுதுவார்கள்.

சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் தொடர்பாக நம் தலைவர் அவர்கள் ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் அவர்கள் பயணம் செய்து, நம் வேட்பாளர்கள், மாவட்ட நிர்வாகிகளை எல்லாம் சந்தித்து, ஒவ்வொரு தொகுதியிலும் ஏன் வெற்றி வாய்ப்பை இழந்திருக்கிறோம், ஏன் வெற்றி வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம் என்று கள ஆய்வு செய்து, நம் தலைவரிடம் அவர்களின் கருத்துகளை எல்லாம் சொல்வார்கள். அந்தக் கருத்துக்களின் அடிப்படையில் கழகத்தின் நலன் கருதி நிச்சயம் நம் தலைவர் நல்ல முடிவை எடுப்பார். வரும் காலங்களில் கழகம் வெற்றிகளைக் குவிக்க நாம் அத்தனைபேரும் ஒற்றுமையோடு ஒன்றாக இருந்து உழைப்போம். இன்று சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதியில் எந்தச் சூழ்நிலையாக இருந்தாலும், எந்த நிலைமையாக இருந்தாலும் வெற்றி பெறுவோம் என்று நிரூபித்துக் காட்டியிருக்கிறோம். அடுத்த முறை இதைவிடப் பல மடங்கு பெரிய வெற்றியை நாம் பெற்றே ஆக வேண்டும், நிச்சயம் பெறுவோம்.

அதற்கு வருகின்ற நாட்களில், சென்ற ஐந்து வருடம் எப்படிக் களப்பணி ஆற்றினோமோ, அதேபோல நானும் உங்களோடு சேர்ந்து களப்பணி ஆற்றுவதற்குத் தயாராக இருக்கிறேன்.

மீண்டும் நம் கலைஞர் ஆட்சி, நம் தலைவர் தலைமையில் மீண்டும் நம் தலைவர் அவர்கள், ”முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்... என்று மீண்டும் பதவியேற்கின்ற நாள் தூரத்தில் கிடையாது. அதைச் செய்து காட்டுவோம் என்று கூறிக்கொண்டு, எனக்கு இந்த மிகப்பெரிய வெற்றியைத் தேடித்தந்த சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி மக்கள், கழக நிர்வாகிகள், வந்திருக்கக்கூடிய தாய்மார்கள், என் அருமைச் சகோதரிகள் உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என் நன்றியைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

**பங்கேற்றவர்கள்!**

மாவட்ட கழகச் செயலாளர் சிற்றரசு, மாவட்டக் கழக நிர்வாகிகள், விக்டர், அகஸ்டின் பாபு, துரை, கலை, பகுதி கழகச் செயலாளர்கள் மதன்மோகன், காமராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மாநில நிர்வாகிகள், இறையன்பன் குத்தூஸ், வி.பி.மணி, பொன்னரசு, தொகுதியின் பார்வையாளர் சி.ஹெச்.சேகர், வழக்கறிஞர் சரவணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர், வி.என்.ராஜன், கமலா செழியன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பிரகாஷ், கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், இளம்பாரதி, ரஹ்மத்துல்லா, விஜயராஜ், சி.கே.ரங்கராஜ், எம்.கே.ஆனந்த், சீனிவாசன், துபாய் விஜய், அசோக் குமார், வட்டக் கழக செயலாளர்கள் ஜெகதீசன், மகேஷ், சின்னராஜ், பிரபாகரன், கோபி, தமீம், ஜி.வி, செந்தில், சசிகுமார், விஜயகுமார், மோகன், பிரபு, ஐ.சி.எஃப் சங்கர், கேரளா ரவி, மாமன்ற உறுப்பினர் ஈஸ்வரி வெங்கடேசன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பாலச்சந்தர், தினேஷ், மோகனவேல், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் கிரிதரன், சஜாத் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.